## நினைவில் நெகிழ்ந்து..!

# தங்கத் தமிழரசன்..!



தென்னம் பாளையது தெறித்து பூப்பதுபோல்,
கன்னங்குழியிட்டுக் கார்குழலார் மனம் நோக,
கன்னல் மொழியுடனே கருத்தமகன் பேசிடுவான்!
மின்னல் பூவாக மெருகூட்டும் கதைகளுண்டு!

வண்ணமாய் அமைச்சகத்தில் வளர்ந்த கதைகளுண்டு!
திண்ணமாய் மாந்தர்சிலர் திரட்டிய செயல்களுமாய்,
எண்ணங்கூட்டிச் சொல்ல இழையும் தமிழுமங்கே!
அன்னைக்கு ஒருமகனாய் அவதரித்த நன்மகனும்;

வண்ணமாய் கல்வி கொண்டு, வனத்துறை பணியுமாகி,
எண்ணம்போல் மேலும் இயங்கிடவே கணினியில்,
கொண்டதோர் கல்வியாக, குவிந்தோம் நாங்களுமே!
திண்ணைக் கல்வியைப் போல் தேர்ந்த வாரநாட்கள்!

கொண்டதோர் அரசுப் பணியது கலன்களாய் இணைத்திடவும்,
மூண்டதோர் நட்பின் முகவரியும் அகவரியாக,
கொண்டதாம் நட்பின்கோலம் குவிந்தது தொடர்ந்ததுவே!
தண்டமிழ் வாசன் தானும் ஒருநாள் மகிழ்ந்து,
கண்டது, இல்லறம் என்னும் நல்லறம் கூட்டும் மணநாள்!

மூண்டது முடிவில்லாதொரு தீங்கும் பின் அங்கே!
கொண்டதாம் உறவுதன்னில் குழப்பங்கள் நிறைந்து ஏக,
மாண்டநல் உறவைப் பூண்ட அந்த மனையாள் தாமும்,
கொண்ட மனம் குன்றி இம்மண்ணகம் நீங்கினாளோ?

எண்ணிட யாவும் இதயம் நொந்து பெற்றோரும் நீங்கினரே!
தன்னிலைத் தாழாமல் தளர்ந்தும் போகாமல் நின்று,
மன்றிலில் வளர்ந்த மனிதர்தம்மை பிணியும் பற்ற,
கண்மூடிப் போனாரே காலன் அழைத்திடவே!
அன்னவர்க்கு உறவு இல்லை அன்புக்கு பிள்ளையில்லை!

மன்னவனாய் வாழ்ந்தவனோ மறைந்து முடிந்திட்டான்!
இன்றவனை நினைக்க நாங்கள் சிலர்தான் உண்டு!
என்றென்றும் அவன் பெயரோ எதனால் நிலைத்திருக்கும்?
அன்னவன் செய்த ஐயப்பன் பாடல் மட்டும் தானுண்டு!

**கு.ப. அசோகன்,** 12-10-2025